**E.P.2/2019**

Date .13.09.2019

Witness: MW 2 திரு.அசோக்குமார்.

1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -

இந்த வழக்கு விபரங்கள் எனக்கு அலுவலக கோப்பு மூலம் தெரியும் என்றால் ஆமாம். மனுதாரர் 1.11.2009 முதல் எங்கள் நிர்வாகத்தின்கீழ்தான் பணி செய்து வந்து அவருக்கு வேலை ஒதுக்கீடு செய்வதும் சம்பளம் வழங்கியதும் 2 ம் எதிர்மனுதாரர் நிர்வாகம்தான் என்றால் 12.02.2011 வரை மனுதாரர் எங்கள் நிர்வாகத்தின்கீழ்தான் பணிபுரிந்தார். 2 ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் தான் மனுதாரரின் வேலை நீக்க உத்தரவில் 1 ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் கையொப்பம் போட்டது என்றால் சரியல்ல. குத்தகை ஒப்பந்தம் சம்பந்தமாக பேச்சுவார்த்தை , தொழிலாளர் சம்பந்தமாக பிரச்சனைகளில் 2 ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் சார்பாக நான் கலந்துகொண்டேனா என்றால் இல்லை. மனுதாரர் ஒழுங்கீன செயல்களில் ஈடுபட்டதாக 1 ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் எங்கள் நிர்வாகத்திற்கு எந்த புகாரும் அனுப்பவில்லை என்றும் 1 ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் அவ்வாறு புகார் அனுப்பியதாக நான் சொல்வது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. 1.11.2009 தேதிக்கு பிறகு தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய பணிக்கொடை மற்றும் இதர பணிப்பலன்களை நாங்கள்தான் வழங்குகிறோம் என்றால் சரிதான். தொ.சா.ஆ.3 குத்தகை ஒப்பந்தத்தின் நிபந்தனை 14 மற்றும் 15 ன்படி 2 ம் எதிர்மனுதாரர் நிர்வாகம்தான் மனுதாரருக்கு தொழில்தாவா எண்.76/2011 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்வத்தின்படி மீண்டும் வேலையும் இதர பலன்களும் வழங்கவேண்டும் என்றால் அதற்கு 1 ம் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் ஒப்புதல் வேண்டும். 1 ம் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் ஒப்புதல் அவசியம் என்று மேற்படி நிபந்தனைகள் 14 மற்றும் 15 ல் கூறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆனால் நிபந்தனை எண்.16 ல் 1 ம் எதிர்மனுதாரரின் சம்மதம் (Consent) தேவை என்று கூறப்பட்டுள்ளது. தொழில்தாவா எண்.76/2011 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்வத்தை எதிர்த்து 2 ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் மேல்முறையீடு செய்தள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி நிர்வாகத்தை எதிர்த்து 1 ம் எதிர்மனுதாரர் நிர்வாகம்

மேல்முறையீடு செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. குத்தகை ஒப்பந்தப்படி 1ம் எதிர்மனுதாரர் எஸ்டேட் நிர்வாகம் எங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதாலும் மனுதாரர் எங்கள் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் வேலை செய்வதாலும் தொழில் தாவா எண். 76/2011ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை நிறைவேற்றுவதற்கு எங்களுக்கு 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் ஒப்புதல் தேவை இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க 1ம் எதிர்மனுதாரர், மனுதாரரின் பணிநீக்க உத்தரவில் கையொப்பம் போட்டுள்ளதால் மேற்படி அவருடைய வேலை நீக்கம் தொடர்பாக அனைத்து நடவடிக்கைக்கும் 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகம்தான் பொறுப்பு என்றால் அது சரியல்ல. 1.11.2009 தேதிமுதல் 1ம் எதிர்மனுதாரரின் கட்டுப்பாட்டில் எஸ்டேட் அல்லது தொழிலாளர்கள் இல்லை என்பதால் மேற்படி தொழில்தாவா தீர்வத்தை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு 1ம் எதிர்மனுதாரருக்கு இல்லை என்றால் சரியல்ல. அதனால் 1ம் எதிர்மனுதாரர் பொருத்து நிறைவேற்று மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை -இல்லை.